ஆறாவது

# பல்பொருட் பெயர்த் தொகுதி

## ஆறாவது

# பல்பொருட் பெயர்த் தொகுதி

### 1025. பொன்னின் பெயர்

ஆடகம், மாசை, ஈழம், ஏமம்,
மாடு, காணம், கனகம், தமனியம்,
வெறுக்கை, சொன்னம், பொருளொடு, அரியே,
ஈகை, நிதியே, கருந்தனம், காஞ்சனம்,
பீதகம், மாடை, தொடுக்கம், அருத்தம்,
சாமீகரம், பூரி, சந்திரம், மாழை,
சாத ரூபம், நிதானம், இரணியம்.
பொலம்என்று இன்னவை பொன்எனப் புகல்வர்.

**பொன்னின் பெயர் (28)**

1. ஆடகம், 2, மாசை, 3. ஈழம், 4. ஏமம், 5. மாடு, 6. காணம், 7. கனகம், 8. தமனியம், 9. வெறுக்கை, 10. சொன்னம், 11. பொருள், 12. அரி, 13. ஈகை, 14. நிதி, 15. கருந்தனம், 16. காஞ்சனம், 17. பீதகம், 18. மாடை, 19. தொடுக்கம், 20. அருத்தம், 21. சாமீகரம், 22. பூரி, 23. சந்திரம், 24. மாழை, 25. சாதரூபம், 26. நிதானம், 27. இரணியம், 28. பொலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

4:2 கருந்தனம் நிதியே

5:1 பீதம்

6-ஆம் அடிக்குப்பின் அச்சுப்பிரதியில் காணும் சேர்க்கை:

நிதானந் தேசிகஞ் செந்தாது வித்தந்
திரவியம் வேங்கை சாம்பூ நதமுறை
சாத ரூப முடன்மண் டமிரணியம்
பொலமென் றின்னவை பொன்னெனப் படுமே. (1)

### 1026. ஐவகை உலோகத்தின் பெயர்

பொன்னும், வெள்ளியும், செம்பும், இரும்பும்,
அன்ன ஈயமும் ஐவகை உலோகம்
இன்னவை பொன் என்று இசைக்கவும் பெறுமே.

**ஐவகை உலோகத்தின் பெயர் (5)**

1. பொன், 2. வெள்ளி, 3. செம்பு, 4. இரும்பு, 5. ஈயம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஐம்பொன்னின் பெயர்

3:3-4 இயம்பவும் படுமே

3-ஆம் அடியைத் தனி நூற்பாவாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன. (2)

### 1027. எழுவகை உலோகத்தின் பெயர்

தாரவொடு கஞ்சம் தானும் கூட்டி
எழுவகை உலோகம் என்னவும் படுமே.

**எழுவகை உலோகத்தின் பெயர் (7)**

1. பொன், 2. வெள்ளி, 3. செம்பு, 4. இரும்பு, 5. ஈயம், 6. தரா, 7. கஞ்சம்,

**பாடவேறுபாடு—விளக்கம்**

2:2-4 உலோகமென் றிசைக்கவும் படுமே. (3)

### 1028. நவமணி கடவுண் மணியின் பெயர்

நவமணி கடவுள் மணி என்று இவற்றின்
நிகழ்பெயர் நிதியும், நிதானமும் என்ப.

**நவமணி கடவுண் மணியின் பெயர் (2)**

1. நிதி, 2. நிதானம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை, நவமணியின் பெயர் : நிதி

கடவுள் மணியின் பெயர் : நிதானம் என நிரனிறையாகக் கொள்வர் முதற் பதிப்பாசிரியர்.

தலைப்பு : நவமணி கடவுண் மணியின் பொதுப்பெயர்,

2:4 என்பர்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா:

பொற்காசின் பெயர்

62 *காணம் பொற்காசே. (4)



### 1029. மணியின் பொதுப் பெயர்

மனவும், காசும், மணியின் பொதுப்பெயர்.

**மணியின் பொதுப் பெயர் (2)**

1. மனவு, 2 காசு,

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 மணியும்

இது முதலாக வரும் மூன்று நூற்பாக்கள் (1029-1031) சில பிரதிகளில் இல்லை. (5)

### 1030. அகல்மணியின் பொதுப்பெயர்

அரதனம், சலாகை, அகல்மணிக்கு ஆகும்.

**அகல்மணியின் பொதுப்பெயர் (2)**

அரதனம், 2. சலாகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அகன்ற மணியின் பெயர், உயர்ந்த மணியின் பெயர். (6)

### 1031. மாணிக்கத்தின் பெயர்

மாமணி, பதும ராகம், மாணிக்கம்.

**மாணிக்கத்தின் பெயர் (2)**

1. மாமணி, 2. பதுமராகம். (7)

### 1032 முத்தின் பெயர்

நித்திலம், தரளம், ஆரம், முத்து என்ப.

**முத்தின் பெயர் (3)**

1. நித்திலம், 2. தரளம், 3. ஆரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3-4 ஆர முத்தே. (8)

## 1033. தாளம் என்னும் பெயர்

தாளம், திரட்சி ஆகவும் சாற்றுவர்.

**தாளம் என்னும் பெயர் (1)**

1. திரட்சி. (9)

## 1034. பவளத்தின் பெயர்

வித்துருமம், துகிர், துப்பே, அரத்தம்.
(ஒத்த) பிரவாளம், துவர், இவை பவளம்.

**பவளத்தின் பெயர் (6)**

1. வித்துருமம், 2. துகிர், 3. துப்பு, 4. அரத்தம் 5. பிரவாளம், 6. துவர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நான்கு புது நூற்பாக்கள் வருமாறு:

மரகதத்தின் பெயர்

63* அரிபச் சை மரகத மரகதமு மாகும்.

அரியொடு பச்சை மரகத மாகும்-பிற்பதிப்பு.

வயிரமணியின் பெயர்

64* வச்சிரம் வயிரம்.

வைடூரியத்தின் பெயர்

65.* வால வாயம் வைடூ ரியமே.

நீலமணியின் பெயர்

66.* மணி நீல மணியே. (10)

## 1035. சங்கநிதி வடிவின் பெயர்

செங்கைநிதி அம்பர்ச் சேந்தன் செங்கையின்
சங்கின் வடிவினது சங்க நிதியே.

**சங்கநிதி வடிவின் பெயர்**

சங்கினி வடிவினது.



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: சங்கநிதி என்பது, சங்கநிதி என்றும் பெயர். சங்கநிதியின் பெயர்.

1:2:3 அம்பற் சேந்தன் 4. வண் கையிற்

2. சங்கநிதி சங்கின் வடிவின தாமே வடிவின தாகும். (11)

## 1036. பற்பநிதி வடிவின் பெயர்

தேமலர் அலங்கல் சேந்தன் செங்கையின்
தாமரை வடிவினது பற்ப நிதியே.

**பற்பநிதி வடிவின் பெயர்:** தாமரை வடிவினது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு:பற்பநிதி என்னும் பெயர், பற்பநிதியின் பெயர். பதுமநிதி யென்பது.

1 : 4 வண்கையில்

2:3-4 பற்பநிதியாகும் பதுமநிதியே (12)

## 1037. நிதியம் என்னும் பெயர்

பதினான்கு வகையும் நிதியம் எனப்படுமே.

**நிதியம் என்னும் பெயர்:** பதினான் வகை :

**பாடவேறுபாடு—விளக்கம்**

பதினான்கு வகையான உலோகமைந்தும் மணி
யொன்பதுமாம் என்பர் முதற்பதிப்பாசிரியர்.

தலைப்பு: நிதியம் என்னும் சொற்பொருட்பெயர்.

பதினால் வகையு நிதிய மெனப்படும்—அச்சுப்பிரதி. (13)

## 1038. பண்டாரத்தின் பெயர்

கோசம், தண்டம், பண்டாரம் ஆகும்.

**பண்டாரத்தின் பெயர்:** (2)

1. கோசம், 2. தண்டம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: திரவிய பண்டாரத்தின் பெயர். (14)

## 1039. வெள்ளியின் பெயர்

இரசதம், தாரம், களதவுதம்.

**வெள்ளியின் பெயர் :** (3)

(1) இரசதம், 2. தாரம், 3. களதவுதம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 களதபுதம், களதௌதம். (15)

## 1040. வெண்கலத்தின் பெயர்

கஞ்சம், வெண்கலம் ஆகக் கருதுவர்.

**வெண்கலத்தின் பெயர் :** (1) கஞ்சம் (16)

## 1041. பித்தளையின் பெயர்

மாயாபுரியே, ஆரகூடம், பித்தளை.

**பித்தளையின் பெயர் :** (2)

1. மாயாபுரி, 2. ஆரகூடம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2-3 புரியார கூடம். (17)

## 1042. செம்பின் பெயர்

சீருணம், தாம்பிரம், கற்பம், செம்பே.

**செம்பின் பெயர் :** (3)

1. சீருணம், 2. தாம்பரம், 3. கற்பம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2-4 தாமிரம் செம்பெனச் செப்புவர். (18)

## 1043. இரும்பின் பெயர்

கருந்தாதும் அயமும் இரும்பு எனக் கருதுவர்.

**இரும்பின் பெயர் :** (2)

1. கருந்தாது, 2. அயம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற் பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**எஃகின் பெயர்**

67. ★சக்தி யெஃகே (19)



## 1044. ஈயத்தின் பெயர்

வங்கமும், சீருளும், ஈயம் ஆகும்.

**ஈயத்தின் பெயர் :** (2)

1. வங்கம், 2. சீருள்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2-3 ஈயமென வைப்பர். (20)

## 1045. காரீயத்தின் பெயர்

நாகம், காரீயம் ஆகக் கருதுவர்.

**காரீயத்தின் பெயர் :** (1) நாகம் (21)

## 1046. தராவின் பெயர்

மதுகம், தரா என வைக்கப் படுமே.

**தராவின் பெயர் :** மதுகம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 வைக்கவும் (22)

## 1047. காந்தமணியின் பெயர்

வலித்து இரும்பை வாங்குவது காந்த மணியே.

**காந்த மணியின் பெயர் :** இரும்பை ஈர்த்து வாங்கும் இயல்பினது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: காந்தமணிக்குணத்தின் பெயர், இரும்புள் வாங்குங் காந்தமணியின் பெயர்.

வலித்திரும் புள்ளே வாங்குங் காந்தஞ்

சொலத்த குஞ் சலாகை சும்பக மென்ப—என்பது அச்சுப்பிரதி (23)

## 1048. சந்திரகாந்தமணிக் குணத்தின் பெயர்

சந்திரன் ஒளியில் தண்ணீர் கால்மணி.

சந்திர காந்தம் எனப் பெயர் சாரும்.

**சந்திர காந்த மணிக்குணத்தின் பெயர் :** சந்திரன் ஒளியில் தண்ணீர் கால்வது.

பாடவேறுபாடு— விளக்கம்

தலைப்பு : சந்திரகாந்தத்தின் பெயர். சந்திரனொளியில் தண்ணீர்காலும் மணியின் பெயர்.

2:3-4 எனப் பெயர் சாற்றும், எனப் பெயராகும். (24)

## 1049 சூரிய காந்த மணிக்குணத்தின் பெயர்

சூரியன் ஒளியில் தீக்கால் சலாகை
சூரிய காந்தம் எனப் பெயர் சொல்லும்.

**சூரிய காந்த மணிக் குணத்தின் பெயர் :** சூரியன் ஒளியில் தீக் கால்வது

பாடவேறுபாடு— விளக்கம்

தலைப்பு: சூரிய காந்தத்தின் பெயர், சூரியகாந்தம் என்னும் பெயர்.
2:4 பெறுமே (25)

## 1050. பளிங்கின் பெயர்

படிகம், பளிங்கு.

**பளிங்கின் பெயர் :** படிகம் (26)

## 1051. பருக்கையின் பெயர்

பருக்கை, காழ் ஆகும்.

**பருக்கையின் பெயர் :** காழ்

பாடவேறுபாடு— விளக்கம்

பளிங்கின் பெயர், பருக்கையின் பெயர் என்னும் தலைப்பில் 1050—1051 ஆம் நூற்பாக்களைச் சிலர் ஒன்றாகக் கொள்வர்.

1050—1051 ஆம் நூற்பாக்களைப் பளிங்கின் பெயர் என்னும் தலைப்பில் ஒரே நூற்பாவாகத் தருகிறது அச்சுப் பிரதி. (27)



## 1052. சங்குமணியின் பெயர்

அக்கு சங்குமணி.

**சங்குமணியின் பெயர் :** (1) அக்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

அக்குச் சங்குமணி யாகு மென்ப - அச்சுப்பிரதி
அக்குச் சங்குமணி யாகக் கூறுவர் என்றும்
அக்குச் சங்கு மணியென வரைவர் என்றும்
பாடவேறுபாடு காணப்படுகிறது. (23)

## 1053. சோகியின் பெயர்

வட்டி, கவடி, பலகறை, சோகி
வெள்வரகு, அலகுஎன விளம்பவும் படுமே.

**சோகியின் பெயர் :** (5)

1. வட்டி, 2. கவடி, 3. பலகறை, 4. வெள்வரகு, 5. அலகு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பலகறையின் பெயர்

1. வராடி சோகி பலகறை யென்ப - பிற்பதிப்பு.

2:1 வெள்வரி, வெள்வாய் (29)

## 1054. பல பண்டத்தின் பெயர்

பன்னியம், கூலம், வளமே, பண்டம்,
பன்னிகாரம், பலபண்டப் பெயரே.

**பல பண்டத்தின் பெயர்:** (5)

1. பன்னியம், 2. கூலம், 3. வளம் 4. பண்டம், 5. பன்னிகாரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*1:4 பண்டாரம்*

*2:3-4 பலபண்டப் பெயர்* (30)

## 1055. அரும்பண்டப் பெயர்

அரும் பண்டப் பெயர் தாரம் என்று ஆகும்.

**அரும் பண்டப் பெயர்:**

(1) *தாரம்,* (31)

## 1056. கர்ப்பூரத்தின் பெயர் (1)

**கர்ப்பூரம் பாளிதம்**

**கர்ப்பூரத்தின் பெயர்:**

(1) பாளிதம்

**பாடவேறுபாடு - விளக்கம்**

*1 கற்பூரம்* (32)

## 1057. கத்திரியின் பெயர்

**கத்தூரியின் பெயர்:** கத்தூரி, **மான்மதம்.**

**கத்தூரியின் பெயர்:** மான்மதம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

கர்ப்பூரத்தின் பெயர் கத்தூரியின் பெயர் என்னும் தலைப்பில் 1056, 1057 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (33)

## 1058. நால்வகைச் சாந்தின் பெயர்

பீதம், காலேகம், வட்டிகை, புளி என
**நால்வகைச் சாந்தின் நாமம் ஆகும்.**

**நால்வகைச் சாந்தின் பெயர்:** (4)

1. பீதம், 2. காலேகம், 3. வட்டிகை, 4. புலி.



**பாடவேறுபாடு—விளக்கம்**

1:2. காலேசம், சலவை 3. மட்டிகை
2:2. சாந்திற்கும். (34)

## 1059. சாந்தின் பொதுப் பெயர்

கலவைச் சேறும், காலேக வண்ணமும்,
தளமும் விரையும் **சாந்தின் பொதுப் பெயர்,**

**சாந்தின் பொதுப் பெயர்:** (4)

1. கலவைச் சேறு, 2. காலேக வண்ணம், 3. தளம், 4. விரை

**பாடவேறுபாடு—விளக்கம்**

*1-3 காமேக*

*2:1-2 களபமும் விரையும், தளம் விரை களபமும்- அச்சுப்பிரதி, விரையும் களபமும்-பிற்பதிப்பு,* (35)

## 1060. செஞ்சாந்தின் பெயர்

குங்குமம், **செஞ்சாந்து.**

**செஞ்சாந்தியின் பெயர்:** குங்குமம், (36)

## 1061. பூசுவனவற்றின் பெயர்

அங்கராகம், **பூசுவன.**

**பூசுவனவற்றின் பெயர்:** (1) அங்கராகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

சேஞ்சாந்துக்கும் பூசுவனவற்றுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1060, 1061 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகச் சிலர் கொள்வர். (37)

## 1062. மயிர்ச்சாந்தின் பெயர்

தகரமும், ஏலமும், காசறையும், **மயிர்ச்சாந்து.**

**மயிர்ச்சாந்தியின் பெயர்:** (4)

1. தகரம், 2. ஏலம், 3. காசறை, 4. பஞ்சாந்து

**பாடவேறுபாடு—விளக்கம்**

தகரமேலங் காசறை மயிர்ச் சாந்தே-அச்சுப்பிரதி (38)

### 1063. சந்தனக் குழம்பின் பெயர்

தேய்வையும் செச்சையும் செற்குழம்பு ஆகும்.

**சந்தனக்குழம்பின் பெயர்:** (2)

1. தேய்வை, 2. செச்சை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு:** குழம்பின் பெயர் (39)

### 1064. அப்புதலின் பெயர்

கொட்டலும், சதுர்த்தலும், அப்புதல் ஆகும்,

**அப்புதலின் பெயர்:** [2]

1. கொட்டல், 2. சதுர்த்தம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. சாத்தலும்-பிற்பதிப்பு. (40)

### 1065. பூசுதலின் பெயர்

புலர்த்தலும், வரித்தலும், பூசுதல் ஆகும்.

**பூசுதலின் பெயர்:** (2)

1. புலர்த்தல், 2. வரித்தல் (41)

### 1066. தொய்யில் என்னும் பெயர்

எழுது கோலால் மகளிர் ஆகத்துத்
தொழில் பெற வரிப்பது தொய்யில் ஆகும்.

**தொய்யில் என்னும் பெயர்:** எழுதுகோலால் மகளிர் மார்பில் எழுதும் கோலத்தின் பெயர். (42)

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு:** தொய்யிலென்னும் சொற்பொருட் பெயர் மகளிராகத்து எழுது கோலத்தின் பெயர்.

### 1067. சுட்டியின் பெயர்

சுடிகையும், திலதமும், திலகமும், சுட்டி.

**சுட்டியின் பெயர்:** (3)

1. சுடிகை, 2. திலதம், 3. சுட்டி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு:** திலகத்தின் பெயர்.

3 பொட்டும் 3-4 சுட்டியுந் திலகம்-அச்சுப்பிரதி. (43)



### 1068. நுதற்புனை குறியின் பெயர்

புண்டரம், திலதம், நுதபுனை குறியே:

**நுதபுனை குறியின் பெயர்:** (2)

1. புண்டரம் 2. திலதம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு நுதனிடு குறியின் பெயர்

2 திலகம் (44)

### 1069. சிந்தூரத்தின் பெயர்

சேலேகம், சிந்தூரம்.

**சிந்தூரத்தின் பெயர்:** சேலேகம் (45)

### 1070. சாதிலிங்கத்தின் பெயர்

இங்குலிகம், சாதிலிங்கம்

**சாதிலிங்கத்தின் பெயர்:** (1) இங்குலிகம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

சிந்தூரத்துக்கும் சாதிலிங்கத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1069—1070 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (46)

### 1071. குங்கிலியத்தின் பெயர்

குங்குலுவும், குக்குலுவும் குங்கிலியம் ஆகும்.

**குங்கிலியத்தின் பெயர்:** (2)

1. குங்குலு 2. குக்குலு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1, குங்குலும் 2. குக்குலும், 3. குற்குலுவும் (47)

### 1072. பெருங்காயத்தின் பெயர்

இங்கு, பெருங்காயம் என்று இசைத் தனரே.

பெருங்காயத்தின் பெயர் (1) இங்கு

**பாடவேறுபாடு—விளக்கம்**

3-4 மென்மனார் புலவர் (48)

### 1073. அரக்கின் பெயர்

அரத்தமும், துப்பும், அரக்கின் பெயரே.

அரக்கின் பெயர் (2)
1. அரத்தம், 2. துப்பு (49)

### 1074. சுக்கின் பெயர்

சுண்டி, சுக்கே

சுக்கின் பெயர்: சுண்டி

பாடவேறுபாடு—விளக்கம்
2. சுக்கு, சுக்காம்.
சுண்டி சு க்கெனச் சொல்லவும் பெறுமே—ஒரு பிரதி. (50)

### 1075. ஏலத்தின் பெயர்

ஏலம், துடியே.

ஏலத்தின் பெயர்: துடி

பாடவேறுபாடு— விளக்கம்
துடியேலம்—அச்சுப்பிரதி
ஏலந் துடியே யென்னச் சொல்லுவர் என்றும் சில பிரதிகளில் காணப்படுகிறது. (51)

### 1076. அதிமதுரத்தின் பெயர்

அதிர்கம், அட்டி, அதிமதுரம் ஆகும்.

அதிமதுரத்தின் பெயர்: (2)
1. அதிர்கம் 2. அட்டி (52)

### 1077. கவரியின்பெயர்

கவரி சாமரை, சவரி, சீகரம்.

கவரியின் பெயர் (3)
1. சாமரை, 2. சவரி, 3. சீகரம்

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு: சாமரையின் பெயர்
1-2 சாமரை கவரி—அச்சுப்பிரதி (53)

### 1078. அச்சுதம் என்னும் பெயர்

அறுகு வெள்ளரிசி கூடியது அச்சுதம்-

அச்சுதம் என்னும் பெயர் : அறுகும் வெள்ளரிசியும் கூடியது.



தலைப்பு அச்சுதம் என்னும் பெயர், அட்சதையின் பெயர்.
1 அறுகை 3 கூட்டியது (54)

### 1079. பிரப்பு என்னும் பெயர்

கொள்கலம் ஒன்றில் குறுணி ஆகப்
பல்உணவு பெய்து பாரிப்பது பிரப்பே.

பிரப்பு என்னும் பெயர் : கொள்கலம் ஒன்றில் குறுமணியளவாக உணவு பலவற்றையும் இட்டுப் பரப்பி வைப்பது.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு: பிரம்பு என்னும் சொற்பொருட் பெயர் (55)

### 1080. விறகின் பெயர்

இந்தனம், காட்டம், துவர் இவை விறகே.

விறகின் பெயர் : (3)
1. இந்தனம், 2. காட்டம், 3. துவர்.

பாடவேறுபாடு—விளக்கம்
2—3 காட்ட முருடிவை (56)

### 1081. ஓம விறகின் பெயர்

சமிதை, ஓம விறகு எனச் சாற்றுவர்.

ஓம விறகின் பெயர் : (1) சமிதை

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : சமிதையின் பெயர் (57)

### 1082. நெருப்பு விறகின் பெயர்

ஞெகிழி, கொள்ளி, நெருப்புறு விறகு ஆம்.

**நெருப்புறு விறகின் பெயர் :** (2)

1. ஞெகிழி, 2. கொள்ளி

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கொள்ளியின் பெயர்.

4 விறகே (58)

## 1083. கடைக் கொள்ளியின் பெயர்

முளரி, அலாதம், உற்கம், **கடைக்கொள்ளி.**

**கடைக்கொள்ளியின் பெயர் :** (3)

1. முளரி, 2. அலாதம், 3 உற்கம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குறைக் கொள்ளியின் பெயர்.

3 பிராத முற்கள் (59)

## 1084. கரியின் பெயர்

கந்துளும், இருந்தையும், **கரி** எனக் கருதுவர்.

**கரியின் பெயர் :** (2) 1. கந்துள், 2. இருந்தை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 கரியெனப் படுமே, கரியெனக் கூறுவர். (60)

## 1085. சாம்பலின் பெயர்

அடலை, வெண்பலி, **சாம்பல்** ஆகும்.

**சாம்பலின் பெயர் :** (2)

1. அடலை, 2. வெண்பலி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 சாம்ப ராகும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த புது நூற்பாக்கள் இரண்டு வருமாறு :



**திருநீற்றின் பெயர் :**

68. காப்பும் பொடியும் பற்பமும் விபூதியுந்
திருநீ றதனைச் செப்புங் கிளவி.

**சாணியின் பெயர்**

69. ★ சாணி புண்ணிய சாந்த மெனப்படும். (61)

## 1086. சுடுசுண்ணச் சாந்தின் பெயர்

சுதையும், களபமும், **சுடுசுண்ணச் சாந்தே.**

**சுடுசுண்ணச்சாந்தின் பெயர் :** 1. சுதை, 2. களபம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சுண்ணச்சாந்தின் பெயர்.

2—3 களபமுஞ் சுண்ணச் (62)

## 1087. புகையின் பெயர்

தூமமும், அரியும், தூபமும், **புகையே.**

**புகையின் பெயர் :** (3)

1. தூமம், 2. அரி, 3. தூபம். (63)

## 1088. மணப்புகையின் பெயர்

குரு உப்புகை நறைபடு **கொழும்புகை** ஆகும்.

**மணப்புகையின் பெயர் :** குரு உப்புகை

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 குய்ப்புகை நறைப்படும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**பனிநீரின் பெயர் :**

70. ★ இமசலஞ் சீதநீர் பனிநீர்க் கெய்தும். (64)

## 1089. சின்னபின்னத்தின் பெயர்

பிதிர், சிதர், பராகம், ததர், சின்ன பின்னம்.

**சின்ன பின்னத்தின் பெயர் : (4)**

1. பிதிர், 2. சிதர், 3. பராகம், 4. ததர்.

**பாடவேறுபாடு — விளக்கம்**

5. தகர் சின்னம். (65)

## 1090. பொடியின் பெயர்

துகளும், நீறும், சுண்ணமும், தாதும்

பொடியின் பெயரே, புழுதியும் ஆகும்.

**பொடியின் பெயர் : (5)**

1. துகள், 2. நீறு, 3. சுண்ணம், 4. தாது, 5. புழுதி

**பாடவேறுபாடு — விளக்கம்**

1 : 4 தாதே

2 : 3—4 புழுதியாகும்.

1089, 1090 ஆம் நூற்பாக்களைப் பொடியின் பெயர் என்னும் தலைப்பில் ஒரே நூற்பாவாக அச்சுப்பிரதி தந்துள்ளது.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**காவிக்கல்லின் பெயர் :**

71. ★ காவிக்கல் செங்கல் ஏகரிகந் தாது. (66)

## 1091. காட்டத்தின் பெயர்

கழிப்புறு குறுமரல் காட்டமெனப்படுமே.

**காட்டத்தின் பெயர் :** குறுமரல்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மரலுக்குப் பெயர்.



நோயின் பெயர் என்று தலைப்பிட்டுக் 'கழிப்புறு வறுமை ஆற்றுக் காட்டெனப் படுமே' எனப் பேராசிரியர் மு. இராகவையங்கார் பிரதியில் காணப்படுகிறது.

"அச்சுப்பிரதி" கழிப்புறு குறுமலத்தின் பெயர் என்னும் தலைப்பில், 'கழிப்புறு குறுமலங் காட்டமெனப் படுமே' என்று தந்துள்ளது. (67)

## 1092. இலவின் பஞ்சின் பெயர்

இலவின் பஞ்சின் பெயர் பூளை ஆகும்.

**இலவின் பஞ்சின் பெயர் :** பூளை

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இலவம் பஞ்சின் பெயர்.

இலவம் பஞ்சி பூளை யென்ப. (68)

## 1093. பருத்தியின் பெயர்

பரியே, பன்னல், காற்பாசம், பருத்தி.

**பருத்தியின் பெயர் : (3)**

1. பரி, 2. பன்னல், 3. காற்பாசம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பருத்திப் பஞ்சின் பெயர்

3 கார்ப்பாசம்

கார்ப்பாசப் பரி பன்னல் பருத்தி- அச்சுப்பிரதி (69)

## 1094. பஞ்சுநுதியின் பெயர்

துய்யே பஞ்சில் தொடர்நுதி ஆகும்.

**பஞ்சுநுதியின் பெயர் :** துய்.

**பாடவேறுபாடு – விளக்கம்**

தலைப்பு : பஞ்சினுனியின் பெயர்

2—3 பஞ்சிற் றுடர்நுதி, பஞ்சித்தும் நுதி பஞ்சிற் றொடர்நுனி, பஞ்சின் றொடர்நுனி. (70)

## 1095. சோற்றின் பெயர்

புன்கம், விதவை, பொம்மல், போனகம்,
அன்னம், ஓதனம், அயினி, அடிசில்,
பாளிதம், பொருவு, மிசை, பரல், துப்பு, அசனம்,
அமலை, உணவு, மிதவை, கவளம்,
சொன்றி, நிமிரல், மடை, கூழ், புழுக்கல்,
(ஒன்றிய) மூரல், சோறு, என உரைப்பர்.

**சோற்றின் பெயர் :** (24)

1. புன்கம், 2. விதவை, 3. பொம்மல், 4. போனகம், 5. அன்னம், 6. ஓதனம், 7. அயினி, 8. அடிசில், 9. பாளிதம், 10. பொருவு, 11. மிசை, 12. பரல், 13. துப்பு, 14. அசனம், 15. அமலை, 16. உணவு, 17. மிதவை, 18. கவளம், 19. சொன்றி, 20. நிமிரல், 21. மடை, 22. கூழ், 23. புழுக்கல், 24. மூரல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1—2 புன்க மிதவை

3 : 1—2 பாளிதம் பொசிப்புமிசை, பாளித பொருகுமிசை, பதம்பாத்துத் துப்பசனம், பதம் பால்புகா—அச்சுப்பிரதி, பதம்பாத்து, பிற்பதிப்பு.

3 பாளிதம் பொசிப்பு மிசைதுப்பசனம்

6 : 4 விசைப்பர்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**பொதிசோற்றின் பெயர்**

72.★ பொதிசோ றாற்றுணாத் தோட்கோப் பாகும் (71)

## 1096. தின்னுஞ்சோற்றின் பெயர்

உண்டி, பதம், வல்சி, உணா.

**தின்னுஞ் சோற்றின் பெயர் :** (3)

1. உண்டி, 2. பதம், 3. வல்சி, 4. உணா.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உணவின் பெயர். (72)



## 1097. உண்டலின் பெயர்

மிசைதல், பக்கித்தல், அயின்றல், நுங்கல்,
விழுங்கல், துய்த்தல், மேவல், அயிறல்,
நுகர்தல் அருந்தல் உண்டல் ஆகும்.

**உண்டலின் பெயர் :** (10)

1 மிசைதல், 2 பக்கித்தல், 3. அயின்றல், 4. நுங்கல், 5. விழுங்கல், 6. துய்த்தல், 7. மேவல், 8. அயிறல், 9. நுகர்தல், 10. அருந்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

உண்ணும் பக்பிற்றொழிலின் பெயர் என்னும் தலைப்பில் பின்வருமாறு பாடங் கொள்கிறார் பேராசிரியர் மு. இராகவையங்கார்.

உண்டிபதம் வல்சி யுணாமிசைதல் பக்கித்தல்
அயின்ற னுங்கல் விழுங்க நுய்த்தல்
மேய்த லயிறல் நுகர்த லருந்தல்
உண்ட றின்றல் பருகுத லென்றிவை
பண்பிற் றொழிலைப் பகருங் கிளவி.

உண்டொலின் பெயர் என அச்சுப்பிரதியிலும் இவ்வாறே காணப்படுகிறது. 3—4 ஆம் அடிகளுக்குப் பின்வரும் பாட வேறுபாடும் பேராசிரியர் காட்டியுள்ளார்.

மாந்த லார்தல் தின்றல் பருகுதல்
உண்ட லாகு மென்மனார் புலவர். (73)

## 1098. கூழ் என்னும் பெயர்

கூழ்என் பெயர்எப் பொருளிற்கும் ஆகும்.

**கூழ் என்னும் பெயர் :** உண்ணும் எப்பொருளுக்கும் உரியது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : எப்பொருட்கும் பெயர்.

2—3 பெயரே யெப்பொருளிற்கு

2—4 பெயரெப் பொருட்குங் கூறும். (74)

### 1099. அடிசில் என்னும் பெயர்

அடப்படுவது, அடிசில்.

**அடிசில் என்னும் பெயர் :** அடப்படுவது (75)

### 1100. புழுக்கல் என்னும் பெயர்

புழுக்குவது, புழுக்கல்.

**புழுக்கல் என்னும் பெயர் :** புழுக்குவது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : புழுங்கல் என்னும் பெயர்

புழுக்குவது புழுங்கல்.

அடிசில் என்னும் பெயர் புழுக்கல் என்னும் பெயர் என்னும் தலைப்பில் 1099, 1100 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (76)

### 1101. தெய்வ வுணவின் பெயர்

அமிழ்தும் அவியும் தெய்வ உணவே
பலியும் சருவும் அப்பெயர்ப் பால.

**தெய்வவுணவின் பெயர் : (4)**

1. அமிழ்து, 2. அவி, 3. பலி, 4. சரு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1 அமுதும்

இதனை இருநூற்பாவாக அச்சுப்பிரதி கொண்டுள்ளது. பிற்பதிப்புக்களில் ஒன்றாகவே காணப்படுகிறது. (77)

### 1102. கருனை என்னும் பெயர்

**கருனை** பதன் அமைத்துக் கரிக்கும் சிற்றுணவு.

**கருனை என்னும் பெயர்:** பதன் அமைத்துக் கரிக்கும் சிற்றுணவு.



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சிற்றுணவின் பெயர், பொரிக்கறியின் பெயர்

2—3 பதனமைத்துப் பொரிக்குஞ் (78)

### 1103. பிட்டின் பெயர்

ஆவி, வெந்தை, பிட்டு.

**பிட்டின் பெயர் :** (2)

1. ஆவி, 2. வெந்தை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

ஆவி வெந்தபிட்டு. (79)

### 1104. உக்காரியின் பெயர்

அஃகுல்லி, உக்காரி.

**உக்காரியின் பெயர் :** அஃகுல்லி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

அஃகுலி

பிட்டுக்கும் உக்காரிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1103, 1104 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (80)

### 1105. மோதகத்தின் பெயர்

மோதகம், இலட்டுகம்.

**மோதகத்தின் பெயர் :** இலட்டுகம் (81)

### 1106. பில்லடையின் பெயர்

பில்லடை, சஃகுல்லி.

**பில்லடையின் பெயர் :** சஃகுல்லி

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: புல்லடையின் பெயர், அடையின் பெயர் புல்லடை சக்குல்லி.

மோதசத்துக்கும் பில்லடைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1105, 1106 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (82)

## 1107. அப்ப வகையின் பெயர்

பூரிகம், நொலையல், கஞ்சனம், தோய்வை
பேத வகைப் பெயர் **அப்பம்** ஆகும்,

**அப்பவகையின் பெயர்: (4)**

1. பூரிகம், 2. நொலையல், 3. கஞ்சனம், 4. தோய்வை

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: பேதவகையப்பத்தின் பெயர், அப்பத்தின் பெயர், அப்பவர்க்கத்தின் பெயர்.

1 : 2 நுலையல், நோலை, 3. கஞ்சம், 4. தோசை—அச்சுப்பிரதி. (83)

## 1108. தினைமாவின் பெயர்

நுவணையும் இடியும் **தினைநுண் பிண்டி**.

**தினைமாவின் பெயர்: (2)**

1. நுவணை, 2. இடி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3. தினையினுண். (84)

## 1109. சிற்றுண்டி என்னும் பெயர்

அப்பம், பிட்டோடு, அஃகுல்லி, இடிஎனச் செப்பிய எல்லாம் **சிற்றுண்டி** ஆகும்.

**சிற்றுண்டி என்னும் பெயர்: (4)**

1. அப்பம், 2. பிட்டு, 3. அஃகுல்லி, 4. இடி.



**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3 அஃகுலி. (85)

## 1110. வறையலின் பெயர்

**வறையல்**, ஒச்சை,

**வறையலின் பெயர்:** [1] ஒச்சை. (86)

## 1111. பிண்ணாக்கின் பெயர்

மலாவகம், **பிண்ணாக்கு**

**பிண்ணாக்கின் பெயர்:** மலாவகம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

மலவகம்

வறையலுக்கும் பிண்ணாக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1110, 1111 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (87)

## 1112. புளிங்கறியின் பெயர்

துவையே கூட்டு அமைத்து அடுவகைத் தொடர்பின் பருகுவன அவையே **புளிங்கறி** ஆகும்.

**புளிங்கறியின் பெயர்:** துவை, கூட்டமைத்து அடுவதும் பருகுவனவாயும் இருப்பது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3—4 அடுதொடர் பிறவும்

2 : 12 பருகுவன வதுவே

இதனை அடுத்து முதற் பதிப்பாசிரியர் செய்தமைத்த நூற்பா.

**கறியின் பெயர்:**

73.★ கறிநீ டாணம். (88)

## 1113. குழம்பின் பெயர்

பாகே, குழம்பு.

குழம்பின் பெயர் : பாகு. (89)

## 1114. கஞ்சியின் பெயர்

கஞ்சி, காடி, மோழை.

கஞ்சியின் பெயர் : (2)

1. காடி, 2. மோழை,

பாடவேறுபாடு—விளக்கம்

குழம்புக்கும் கஞ்சிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1113, 1114 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (90)

## 1115. தயிரின் பெயர்

ததியும், அளையும், தயிர் என மொழிப.

தயிரின் பெயர் : (2)

1. ததி, 2. அளை

பாடவேறுபாடு—விளக்கம்

மேழை ததியளை தயிரென விளம்புவர். (91)

## 1116. பாலின் பெயர்

பயமும், கீரமும், அமுதமும், பாலே.

பாலின் பெயர் : (3)

1. பயம், 2. கீரம், 3. அமுதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

பயமுஞ் சீரமு மமுதும் பாலே. (92)

## 1117. நெய்யின் பெயர்

இழுதும், கிருதமும், துப்பும், நெய்யே.
ஆச்சியம் என்றும் அதன் பெயர் ஆகும்.

நெய்யின் பெயர் : (5)

1. இழுது, 2. கிருதம், 3. துப்பு, 4. நெய், 5. ஆச்சியம்.



பாடவேறுபாடு—விளக்கம்

1 : 3 கிருதும்

இரண்டாம் அடியை மற்றும் நெய்யின் பெயர் என்று தலைப்பிட்டுத் தனி நூற்பாவாக அச்சுப்பிரதி கொண்டுள்ளது. இவ்வடி சில பிரதிகளில் இல்லை. (93)

## 1118. மோரின் பெயர்

முசரே, தக்கிரம், பிரை, மோர் ஆகும்.

பிரைமோரின் பெயர் : (3)

1. முசர், 2. தக்கிரம், 3. பிரை.

பாடவேறுபாடு—விளக்கம்

3—4 மோரென் ஆகும்.

இதன்பின் அச்சுப்பிரதியில்,

வெண்ணெயின் பெயர் என்னும் தலைப்பில்

'ஐயங்க வீனம் நவநீதம் வெண்ணெய்'

என ஒரு நூற்பா காணப்படுகிறது, பழமையான பிரதிகளில் இது இல்லை. (94)

## 1119. தேனின் பெயர்

பிரசமும் மதுவும் தேன் எனப் பேசுவர்.

தேனின் பெயர் : (2)

1. பிரசம், 2. மது.

பாடவேறுபாடு—விளக்கம்

4 படுமே. (95)

## 1120. சர்க்கரையின் பெயர்

கட்டியும், விசயமும், குளமும், கன்னலும்.
(ஒட்டிய) பாகும், அக்காரமும், சருக்கரை.

சருக்கரையின் பெயர் : (6)

1. கட்டி, 2. விசயம், 3. குளம், 4 கன்னல், 5. பாகு, 6. அக்காரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சற்கரையின் பெயர், சர்க்கரையின் பெயர்

2—3 குளமும் விசையமுங்

1 : 2 விசையமுங், 4. கன்னலொடு (96)

## 1121. கண்டசருக்கரையின் பெயர்

கண்டம், பாளிதம், கண்ட சருக்கரை
உண்டை புல்ல கண்டமொரு விகற்பம்.

கண்டசருக்கரையின் பெயர் : (4)

1. கண்டம், 2. பாளிதம், 3. உண்டை, 4. புல்ல கண்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கண்டு சருக்கரையின் பெயர்

1 : 3—4 கண்டு சருக்கரை

2 : 1—2 உண்டே புல்ல, உண்டயிர் புல்ல, உண்டையபிர் புல்ல

இரண்டாம் அடியை மற்றுங்கண்ட சருக்கரையின் பெயர் என்னும் தலைப்பில் தனி நூற்பாவாக. உண்டையயிர் புல்ல கண்டமொரு விகற்பம் என அச்சுப்பிரதி தருகிறது. புல்ல சுண்டபென்னும் பெயர் என்னும் தலைப்பில் 'உண்டை புல்ல கண்டமொரு விகற்பம்' என ஒருசில பிரதிகளில் உள்ளது. (97)

## 1122. கள்ளின் பெயர்

இக்கு, நனை, தேன், முருகு, தொப்பி, நறவு, பிரசம்,
தணியல், சுரை, படு, வேரி, மட்டு, தேறல், சாறு,
பானம், வடி, பிழி, மது, வழி, தொண்டி, யானம்,
அரிட்டமும், சாதியும், கள் ஆகுமே.
(அருகிக்) கல்வையும், விளம்பியும் ஆகும்.

கள்ளின் பெயர் : (25)

1. இக்கு, 2. நனை, 3. தேன், 4. முருகு, 5. தொப்பி, 6. நறவு, 7. பிரசம், 8. தணியல், 9. சுரை, 10. படு, 11. வேரி, 12. மட்டு, 13. தேறல், 14. சாறு



15. பானம், 16. வடி, 17. பிழி, 18. மது, 19. வழி, 20. தொண்டி, 21. யானம், 22. அரிட்டம், 23. சாதி, 24. கல்வை, 25. விளம்பி.

பாடவேறுபாடு—விளக்கம்

3 : 2 பாணி

4 : 3 மது வெறி

3 : 1—2 யானம் மருட்டமும், யானமு மருட்டமும்

6 : 2 கௌவையும்

1—5 : இக்கு நனைதேன் முருகு தோப்பி
நறவு பிரசந் தணியல் சுரைபடு
வேரி மட்டுத் தேறல் சாறு
பானம் வழிபிழி மதுவெறி தொண்டி
யானமு மருட்டமுஞ் சாதியுங் கள்ளே.

ஈற்றடியை மற்றும் 'கள்ளின் பெயர்' என்னும் தலைப்பில் தனி நூற்பாவாக அச்சுப்பிரதி கொண்டுள்ளது. சில ஏட்டுப் பிரதிகளிலும் இவ்வாறு தனி நூற்பாவாக உள்ளது. (98)

## 1123. பேதவகைக் கள்ளின் பெயர்

பாலி, சுபாலி, ஆலி, மருட்டம்,
மாலி, முண்டகம், சாலி, மாரி,
பாடலி, மவ்வி, சுக்கிரி, நாளி,
பாணி, குந்தி, மதுகரம், சூழ்கை.
ஆதுலம், ஆம்பில், அம்பி, அம்பதை,
மேதை, கஞ்சா, விசுளி, சுலோகி,
பேத வகைக்கட் பெயர் என அறைவர்.

பேதவகைக் கள்ளின் பெயர் : (24)

1. பாலி, 2. சுபாலி, 3. ஆலி, 4. மருட்டம், 5. மாலி, 6. முண்டகம், 7. சாலி, 8. மாரி, 9. பாடலி, 10. மவ்வி, 11. சுக்கிரி, 12. நாளி, 13. பாணி,

14. குந்தி, 15. மதுகரம், 16. சூழ்கை, 17. ஆதுலம், 18. ஆம்பில், 19. அம்பி, 20. அப்பதை, 21. மேதை, 22. கஞ்சா, 23. விசுளி, 24. சுவோகி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஒருசார் கள்ளின் பெயர்.
1 : 1 மாவலி, மாலி, 4. யருட்டம்
2 : 1 சாலி, மேலி, 4. சாதி
3 : 2 மௌவி, மௌலி, மவுலி, மோடலி
3 : 3—4 சிக்கிரி நாளி, சிக்கர் ஞாளி
4 : 3 மதுகஞ் 4. சூழிகை, குளிகை, சுவிகை
5 : 1 ஆதுவம், ஆசவம் 3. அம்மி
6 : 1 பேதை 3. விதுணி. (99)

## 1124. பருகுவனவற்றின் பெயர்

பானம், பருகுவன எவற்றிற்கும் பெயரே.

**பருகுவனவற்றிற்கும் பெயர் :** பானம்.
தலைப்பு : பானம் என்னும் பெயர், பானமென்பது.
4 ஆகும். (100)

## 1125. அமிழ்தின் பெயர்

அமிழ்தின் பெயரே மருந்து எனல் ஆகும்.

**அமிழ்தின் பெயர் :** (1)
மருந்து

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : அமுதின் பெயர்
1. அமுதின். (101)

## 1126. நஞ்சின் பெயர்

ஆலம், காரி, கடு, விடம், நஞ்சே.



**நஞ்சின் பெயர் :** (4)
1. ஆலம், 2. காரி, 3. கடு, 4. விடம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
2 காரிகாளம். (102)

## 1127. உண்பனவற்றின் பெயர்

துற்றி, உண்பன.

**உண்பனவற்றின் பெயர் :** (1)
துற்றி. (103)

## 1128. தின்பனவற்றின் பெயர்

திற்றி, தின்பன.

**தின்பனவற்றின் பெயர் :** (1)
திற்றி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

உண்பனவற்றுக்கும் தின்பனவற்றுக்கும் பெயர் தலைப்பில் 1127, 1128 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். துற்றி திற்றி யென்னும் பெயர் என்றும் தலைப் பிடுவர். (104)

## 1129. இலைநுகர் விலங்கனி உணவின் பெயர்

இலைநுகர் விலங்கின் உணவு, குளகு என்ப.

**இலைநுகர் விலங்கின் உணவின் பெயர் :** (1)
குளகு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : விலங்கினுணவின் பெயர், குளகென்னும் பெயர். (105)

## 1130. பறவை விலங்கின் உணவுப் பெயர்

பறவைக்கும் ஒருசார் விலங்கிற்கும் உணவு
இரையும் உண்டியும் எனப் பெயர் பெறுமே.

**பறவை விலங்கின் உணவுப் பெயர் :** (2)
1. இரை, 2. உண்டி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பறவை யுணவிற்கும் ஒருசார் விலங்கிற்கும் பொதுப் பெயர், இரை உண்டி என்னும் பெயர்.

2 இரையுறை யூட்டி யெனப் பெயர்பெறுமே — பிற்பதிப்புக்கள். (106)

## 1131. ஒழிபொருளின் பெயர்

மிச்சிலும் எச்சிலும் ஒழிபொருள் பேர.

ஒழிபொருளின் பெயர் : (2)

1. மிச்சில், 2. எச்சில்.

பாடவேறுபாடு - விளக்கம்

தலைப்பு : சேடத்தின் பெயர், எச்சிலின் பெயர் உச்சிட்டத்தின் பெயர்.

1—2 மிச்சி லெச்சி லுச்சிட்டம். (107)

## 1132. துணைக்காரணத்தின் பெயர்

துப்பே, சாதனம், துணைக்காரணம் ஆம்

ஒக்கும் அதற்கே உபகரணப் பெயரே.

துணைக்காரணத்தின் பெயர் : (3)

1. துப்பு, 2. சாதனம், 3. உபகர்ணம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உபகரணத்தின் பெயர்.

3—4 துணைக்காரண மாகும்.

மற்றும் துணைக்காரணத்தின் பெயர் என்னும் தலைப்பில் இரண்டாம் அடியைத் தனி நூற்பாவாக முதற் பதிப்புக் கொண்டுள்ளது. (108)

## 1133. இரண்டின் பெயர்

உபயமும், உகளமும், ஓர் இரண்டு ஆகும்.



இரண்டின் பெயர் : (2)

1. உபயம், 2. உகளம். (109)

## 1134. பேய்த்தேரின் பெயர்

வெண்டேர், கானல், பேய்த்தேர் ஆகும்.

பேய்த்தேரின் பெயர் : (2)

1. வெண்டேர், 2. கானல். (110)

## 1135. தூக்குவனவற்றின் பெயர்

துணை, அறை, தூக்கம், சல்லி ஆகும்.

தூக்குவனவற்றின் பெயர் : (3)

1. துணை, 2. அறை, 3. தூக்கம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தோரணத் தூக்கின் பெயர், தூக்கத்தின் பெயர்.

1. துணியறை 2. தூக்குஞ்

2—4 தூக்கந் துத்தியுஞ் சல்லி. (111)

## 1136. அலகு என்னும் பெயர்

மகிழின் பரலும், நெல்லின் மணியும்

அனையவை அலகு எனும் பெயர ஆகும்.

அலகு என்னும் பெயர் :

மகிழின் பரலுக்கும் நெல் மணிக்கும் உரியது. (112)

## 1137. நிரையின் பெயர்

ஒளியும், பந்தியும், ஒழுங்கும், நிரை ஆகும்.

நிரையின் பெயர் : (3)

1. ஒளி, 2. பந்தி, 3. ஒழுங்கு. (113)

1138. திவாகர வரலாறு

வருநல் கங்கை வடதிசைப் பெருமையும்
தென்திசைச் சிறுமையும் நீக்கிய குறுமுனி
குண்டிகைப் பழம்புனல் காவிரிப் பெரும்பதி
அம்பர்க்கு அதிபதி சேந்தன் திவாகரத்து
ஆறாவது பல்பொருள் பெயர்த் தொகுதி முற்றும்.

கங்கை வடதிசைப் பெருமையுந் தெ்றிசை
சிறுமையு நீக்கிய குறு முனி குண்டிகைப்
பழம்புனற் காவிரிப் பெரும்பதி யம்பர்க்
கதிபதி சேந்தன் றிவாகரத் தாறாவது
பல்பொரு ளுரைக்கும் பெயர்த்தொகுதி முற்றும்.

அதிபதி சேந்தன் தெரிந்த திவாகரத்
தாறாவது பல்பொருட் பெயர்த்தொகுதி முற்றும்.

இயற்கை வடிவாந் தொகுதியாறு முற்றும். (114)

ஏழாவது

# செயற்கைவடிவின் பெயர்த்தொகுதி